திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாடு என்று சொன்ன சமயம் கூட அந்த வண்டி முஞ்சிறையிலிருந்து சென்று கொண்டிருந்தது. அந்தத் தட்டுப்பாடு முடிந்ததற்குப் பிறகு, அதற்கு அப்புறம் அந்த வண்டி நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் கருணை கொண்டு முஞ்சிறையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் விட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்ட காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நம்முடைய காலத்திலே அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முஞ்சிறையிலிருந்து மார்த்தாண்டம் வழியாக பேருந்துகளை - மார்த்தாண்டம் முஞ்சிறையிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. முஞ்சிறையிலிருந்து சென்னைக்கு பேருந்துகளை இயக்குகின்ற பொழுது அதிலே பயணம் செய்தவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினாலே தான் அது நிறுத்தப்பட்டது. ஆகவே மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு மனத்திலே கொண்டு இயக்க சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 426, திரு. இரா. தங்கராசு, இருக்கையில் இல்லை.

வினா எண் 427, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

427—

இராஜபாளையத்தில் புறச்சாலை அமைத்தல்

* ***35393*** *திரு. தி. சாத்தையா:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் நகருக்கு புறச்சாலை அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அத்தகைய திட்டங்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக ராஜபாளையம் நகருக்கு நடுவே செல்லுகிற ஹை வேஸ் ரோடு குறுகலாக இருப்பதால், அல்மோஸ்ட் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை ஆக்சிடன்ட் ஏற்படுகிறது. இதற்காக கடந்த ஆண்டுகளிலே புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி 1991-லேயிருந்து ஆரம்பித்து, அந்த வருஷத்திலேயிருந்து ஒவ்வொரு வருடமும் இந்த பை பாஸ் ரோடு ராஜபாளையத்திற்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாலும், தென்காசி, செங்கோட்டை, குற்றாலம் போகிற ஸ்டடியிட் பஸ்களும் அந்த ஊருக்கு நடுவிலே போய்க் கொண்டிக்கிற அந்த ரூட்டிலே செல்வதாலும் அடிக்கடி சாலைகளில் நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் அடிக்கடி உண்டாகிறது. போன மாதம் கூட ஒரு ஆக்சிடென்ட் ஆகிவிட்டது. ஆகையால் இதற்கு ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, அந்த நகருக்கு நடுவே செல்லும் ரோடுக்கு ஒரு பை பாஸ் ரோடு அமைக்க அரசு முன் வருமா.என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் நகருக்கு புறவழிச் சாலையானது, தென்காசி மதுரை சாலையில் கிலோ மீட்டர் 70/4 தொடங்கி இடது புறமாக முனிசிபல் சாலை வழியாக ராஜபாளையம் ஐயனார் கோவில் சாலை கி.மீ. 0/8ல் இணைந்து கொண்டனேரி கண்மாய் வழியாக புதியதாக சாலை அமைத்து, தென்காசி மதுரை சாலையில் கி.மீ. 67/8-ல் கொண்டு சேருமாறு அமைக்கப்பட வேண்டும். இந்தச் சாலையை அமைப்பதற்கு ஏறக்குறைய 2½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இப்பணி அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. ஆனால் இப்பணியை ஏதாவது ஒரு திட்டத்தின் கீழோ அல்லது தனி அமைப்பின் கீழேயோ செய்வதற்கு தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலை அவர்களிடத்தில் நான் ஏற்கெனவே அறிவுறுத்தியிருக்கிறேன். பொதுவாக பை பாஸ் சாலைகளை பொறுத்த மட்டிலே எல்லா ஊர்களுக்கும் இன்றைக்கு பை பாஸ் சாலைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற இடங்களிலே தான் புற வழிச் சாலைகளை அமைக்கின்ற பணிகளை நாம் மேற்கொணடிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய அனைத்து நகரங்களுக்கும் புற வழிச் சாலைகள் அமைப்பது என்பது அவ்வளவு ஏதுவாக இருக்காது.

அதற்கு நிதிநிலையும் இடம் தராது. அந்த அடிப்படையிலே தான் பெரிய நகர சாலையாக இருந்தாலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கிற காரணத்தினாலே தான், அங்கு நெரிசலை கணக்கிலே எடுத்துக் கொண்டு புறவழிச் சாலைகளை அமைக்கின்ற பணிகளை எடுத்துச் செய்கிறோம். ஒரு புறவழிச் சாலை அமைக்கின்ற போது அதிகமாக நிதி தேவைப் படுகிறது.

பல கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் செலவழிக்க வேண்டி இருக்கிறது. இருக்கின்ற சாலைகளையும் நாம் மெயின்டெயின் செய்ய வேண்டும்; புதிதாக பாலங்களையும் நாம் கட்ட வேண்டும்; இதுபோன்ற புறவழிச் சாலைகளையும் அமைக்க வேண்டும் என்று வருகின்றபோது இதற்கெல்லாம் முன்னுரிமை கொடுப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே இதைவிட போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள நகரங்கள் எல்லாம் அதிகம் இருக்கின்றன. அதையெல்லாம் பரிசீலித்த பின்னாலேதான் இராஜபாளையம் நகருக்கு வரமுடியும். மேலும் அந்தப் பகுதியினுடைய நிலையை கணக்கில் எடுக்க வேண்டும் என்று நம்முடைய தலைமைப் பொறியாளர் அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளருடைய அறிக்கை வந்தவுடன் அரசு நிதியாதாரத்தின் அடிப்படையிலே பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.25

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே தென் மாவட்டங்களில் அதிகமாக தொழிற்சாலைகளைக் கொண்ட நகரம் இராஜபாளயம் நகரம் ஆகும். அங்கிருந்து நிறைய ஹெவி வெஹிகில்ஸ் போய் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் இந்த பை-பாஸ் ரோடு அமைப்பதற்கு பிரைவேட் கான்ட்ரிபீயூஷன்- வெளியாட்கள் கான்டிரிபியூட் பண்ணினால் இந்த அரசாங்கமும் பாதித் தொகையைப் போட்டு அந்த பை-பாஸ் ரோடு அமைக்கலாம் என்ற கருத்தும் இருந்தது. ஆனால் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் பல முன்னேற்றமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும்போது அந்த பிரைவேட் கான்ட்ரிபியூஷன் பண்ணும்போது அந்த நபர்கள் அவர்களது பெயரையோ அல்லது அவர்களது சொந்தக்காரர்கள் பெயரையோ அந்த ரோட்டுக்கு வைத்தால் நாங்கள் கான்ட்ரிபியூட் பண்ணுகிறோம் அந்த பை-பாஸ் ரோடு அமைப்பதற்கு என்று கூறுகிறார்கள். அப்படி அவர்கள் பாதி அளவு கான்ட்ரிபியூட் பண்ணி அந்த ரோடு அமைத்து வேலைகள்

தொடங்கி வைக்கும்போது நம் புரட்சித் தலைவி ஆட்சியில் நாம் உருவாக்கிய அந்த பை-பாஸ் ரோடு- அந்த செய்முறை பயன் இல்லாமல் மக்கள் மத்தியில் போய்விடுகிறது. ஆகையால் அந்த முழுத் தொகையையும் அரசாங்கமே செலவழித்து அந்த நெரிசலான இராஜபாளையம் பகுதிக்கு பை-பாஸ் ரோடு அமைக்க ஒரு ஸ்பெஷல் ஆர்டர் முன்வைத்து அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அதை அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முதலீடு பற்றி என்னிடத்திலே யாரும் இதுவரை தொடர்பு கொள்ளவில்லை. அரசிடத்திலும் அப்படித் தொடர்பு கொண்டதாக எனக்குத் தகவல் இல்லை. தனியார் பை-பாஸ் சாலைகள் அமைப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு அவர்கள் அரசிடத்திலே தொடர்பு கொள்ளும் போது அதற்கான வழி முறைகள் என்ன, எப்படி செய்ய முடியும் அவர்கள் கடன்கள் அடிப்படையிலே கொடுத்து, அரசின்மூலம் கடன் கொடுத்து செய்கிறார்களா அல்லது அவர்களே தனியாகச் செய்கிறார்களா என்ற பிரச்சினை எல்லாம் வரும். இடம் எப்படிக் கொடுப்பது, எந்த அடிப்படையிலே செய்ய வேண்டும் என்பதெல்லாம் அதற்குப் பெரிய ஆய்வே நடத்தி அதற்குப் பின்னாலேதான் முடிவு எடுக்க முடியும். ஆகவே இது சம்பந்தமான கோரிக்கை இதுவரை எதுவும் அந்தப் பகுதியிலிருந்து, தனியார் துறையிடமிருந்து வரப்படவில்லை. ஆகவே அதுபற்றி இப்போது அரசு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, யார் பாதி போடுவது, யார் இன்னொரு பாதி போடுவது என்றெல்லாம் பிரச்சினை இங்கே எழாது. அரசு பாதி போட்டு தனியார் பாதி போட வேண்டும் என்ற பிரச்சினை எல்லாம் இப்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை. அந்தப் பேச்சே எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் இதை அரசின் சார்பிலே அமைப்பதற்காகத்தான் முன்னறிவு அறிக்கைகளை தயார் செய்யுமாறு தலைமைப் பொறியாளரிடத்திலே கேட்டிருக்கிறோம். அதுதான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல வருங்காலங்களிலே இருக்கின்ற நிதி ஆதாரங்களின் அடிப்படையிலேதான் இதை பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 428, திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.